# நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விதவைகளின் சமூக பொருளாதார நிலை பற்றிய ஓர் ஆய்வு

**ச. புஸ்பலலிதா**

பிரதேச செயலகம், துணுக்காய், இலங்கை
vathana.sun@gmail.com

**சுருக்கம்:** யாழ் மாவட்டத்தில் வளர்ந்து வருகின்ற பிரச்சனைகளில் ஒன்றாக விதவைகள் தொடர்பான பிரச்சனை விளங்குகின்றது. விதவைகளின் முன்னேற்றம் என்பது மாவட்ட அபிவிருத்திக்கு அவசியமாக காணப்படுகின்றது. இதனால் விதவைகளின் சமூகபொருளாதார நிலையை ஆய்வு செய்வதனூடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தமுடியும். இந்தவகையில் நல்லூர் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட 40 கிராமசேவையாளர் பிரிவுகளை அவற்றின் தன்மை அடிப்படையில் 10 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன. அவையாவன அரியாலை, ஐயனார்கோவிலடி, வண்ணார்பண்ணை, கந்தர்மடம், திருநெல்வேலி, நல்லூர், சங்கிலியன்தூபி, நீராவியடி, கோண்டாவில், கொக்குவில் என்பனவாகும். நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 60 வயதிற்குட்பட்ட விதவைகளின் மொத்த எண்ணிக்கையில் 10% மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டு உயர்வருமானம் பெறும் 5 விதவைக் குடும்பங்களும், குறைந்தவருமானம் பெறும் 10 விதவைக் குடும்பங்களும் என ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 15 குடும்பங்கள் என்றவகையில் 150 விதவைக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஊடாக நல்லூர் பிரதேச விதவைகளின் சமூக பொருளாதார நிலை என்பதால் சுயதொழில் செய்வதற்கு நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றமையும் பாரம்பரிய சுயதொழில்களான கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கைவினைப் பொருட்கள் உற்பத்தி, தையல் போன்றவற்றையும் மேற்கொள்வதால் இன்றைய நிலையில் இவை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த போதுமானதாகக் காணப்படவில்லை. நல்லூர் பிரதேச விதவைகளில் பெரும்பாலானவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும், கீழ் உழைப்பு, வேலையின்மை போன்றன அதிகளவு நிலவுவதனாலும் இவ் விதவைகள் தற்கால உயர் பொருளாதார நிலையை அடைந்துகொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ளக் காரணமாக அமைகின்றது என்பதை அறியமுடிகின்றது. இந்த ஆய்வின் மூலம் விதவைகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதோடு, பொருளாதார சமூகரீதியில் அவர்களை வலுப்படுத்துவதற்கு சுயதொழில் ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அவர்களை மேம்படுத்த முடியும். எனவே கடந்த 30 வருடயுத்தத்தின் விளைவின் பின் நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சமூகபொருளாதார நிலை பற்றிஆய்வு மேற்கொள்ளப்பட்டது.